**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் -திரு.குணசேகரன் **PW-59** தொழில் -

த/க பெயர் -குருநாதன் வயது -

கிராமம் -

தாலுக்கா -

**(எதிரி ஆஜர்கள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை:-**

நான் சென்னையில் புளியந்தோப்பில் பிகே காலனியில் 13-வது பிளாக்கில் கதவு எண் 370-ல் குடியிருக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு எங்கு படித்தேன் என்றால் சென்னையில் தனியார் பிடிஇ செங்கல்வராயன் நாயக்கர் ஹையர் செகண்டரி பள்ளியில் பத்தாம் வகுப்பு, சென்னையில் உள்ள இந்து உயர்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்தேன். நான் என்னுடைய B.Com பட்டப்படிப்பை சென்னையில் தியாகராஜா கல்லூரியில் படித்தேன். இந்த வழக்கில் சாட்சியான அர்ஜுனன் மகன் அருண் என்பவரை எனக்கு எப்படி தெரியும்

என்றால் அவர் என் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார். அவர் என்னிடம் என்ன சொன்னார் என்றால் டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வு எழுதலாம் என்று சொன்னார் ஆனால் நான் எழுதவில்லை அவரும் எழுதவில்லை. அவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை நானும் அவரும் வீட்டில் தான் இருந்தோம். 17-ம் எதிரி ஸ்ரீதர் என்ற ஸ்ரீதர் ராஜை எனக்கு யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் அசல் என்னுடையதுதான். கல்லூரி மாற்றுச் சான்றிதழ் என்னுடையதுதான். (மேற்படி சான்றிதழ்கள் அ.சா.ஆ.52 (3 எண்ணிக்கைகள்) வரிசையாக அ.சா.44 வாயிலாக குறியீடு செயப்பட்டுள்ளது.) மேற்படி ஆவணங்களை நான் யாரிடம் எப்போது கொடுத்தேன் என்றால் பேருந்தில் பயணம் செய்யும்போது அந்த ஆவணங்கள் தொலைந்து விட்டது. அவ்வாறு தொலைந்த சான்றிதழ்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் இது தொடர்பாக பி1 புளியந்தோப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், நாளிட்ட தேதி வரையில் அந்த சான்றிதழ்கள் கிடைக்கவில்லை. இந்த வழக்கு தொடர்பாக சிபிசிஐடி டிஎஸ்பி என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

**சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னை சிபிசிஐடி டிஎஸ்பி விசாரணை செய்தபோது என் நண்பரான அருண் டிஎன்பிஎஸ்சி தேர்வு மூலம் எனக்கு வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றும் அதற்கு 2 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தால் ஏற்பாடு செய்து விடலாம் என்று கூறியிருந்தார் என்றும் உடனடியாக கொடுப்பதற்கு பணம் இல்லாததால் எனது மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் டி.சியை முதலில் கொடுத்த வேலை பெற்று தர நான் அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றும், அதை அருண் ஸ்ரீதர் ராஜ் என்பவரிடம் கொடுத்தார் என்றும் பின்னிட்டு தேர்வு எழுதாததால் என்னுடைய சான்றிதழ்களை ஸ்ரீதர் ராஜிடமிருந்து பெற்று தரச் சொல்லி பலமுறை நான் அலுவலகம் சொன்னேன் என்றும் வாக்குமூலம் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.01.29 18:31:04 +0530

Chief Judicial Magistrate,
Erode.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.அருண் **PW–60** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(எதிரி ஆஜர்கள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை:–**

நான் சென்னை பட்டாளம் எம் பிளாக் கதவு எண் 16–ல் கூடியிருக்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம்., பட்டப்படிப்பு படித்துள்ளேன். ஜெய்னிவாசன் என்பவரை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் டீக்கடையில் டீ சாப்பிட்ட வகையில் அவரை பார்த்து பழக்கம். மேற்படி ஜெய்னிவாசன் என்னை யாருக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றால் அவர் யாருக்கும் என்னை அறிமுகம் செய்து வைக்கவில்லை. தற்போது நான் என்ன வேலை பார்மா பீல்டில் மருத்துவ பிரதிநிதியாக வேலை செய்கிறேன். 2013 ஆம் ஆண்டு நான் என்ன

வேலை பார்த்தேன் என்றால் அப்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.59 குணசேகரனை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் அவரையும் டீக்கடையில் பார்த்த வகையில் பழக்கம். நான் எத்தனை முறை டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதி உள்ளேன் என்றால் இதுவரையில் எழுதியதில்லை. என்னுடைய பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மற்றும் கல்லூரி டிசி ஆகியவை நான் யாரிடம் கொடுத்தேன் என்றால் நான் யாரிடமும் கொடுக்கவில்லை, பேருந்தில் பயணம் செய்த போது தொலைந்து விட்டது அது தொடர்பாக B2 காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் அசல் மற்றும் கல்லூரி மாற்றுச் சான்றிதழ் அசல் ஆகியவை என்னுடையதுதான். (அவை ஏற்கனவே அ.சா.44 வாயிலாக அ.சா.ஆ.50 வரிசையாக (3 எண்ணிக்கை) குறியீடு செய்யப்பட்டுள்ளது.) இந்த வழக்கு சம்பந்தமாக கோவை சிபிசிஐடி டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற 164 சாட்சி வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தானா என்றால் இல்லை, அது என்னுடையது அல்ல.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கோவை சிபிசிஐடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தபோது மேற்படி ஜெய்னிவாசன் என்பவர் 17 வது எதிரி ஸ்ரீதர் ராஜ் அவருடைய நண்பர் என்றும் அவர் கால் டாக்ஸி நிறுவனம் வைத்துள்ளதாகவும் அவரை சென்று பார்க்கும் படியும் சொன்னதன் பெயரில் நான் அவரை சென்று பார்த்தேன் என்றால் நான் அவரை சென்று பார்த்து அவரிடம் வேலைக்கு சேர்ந்தேன் என்ன வேலைக்கு சேர்ந்தேன் என்றால் கால் டாக்ஸி அலுவலகத்தில் வேலைக்கு சேர்ந்தேன். மாதம் எனக்கு எவ்வளவு ரூபாய் சம்பளம் வழங்கினார் என்றால் 6,500/- ரூபாய் சம்பளம் வழங்கினார். நான் வேலைக்கு சேர்ந்த போது நான் பிகாம் படித்துள்ள விவரம் அவரிடம் சொன்னேன் என்றால் ஆமாம். அப்போது அவர் டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுத என்னிடம் சொன்னார் என்றும் அதற்கு வினாத்தாள்கள் தேர்வுக்கு முன்பே தருவதாகவும் 50,000 ரூபாய் பணம் கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னிடம் பணம் இல்லை என்று கூறினேன் என்றும் அப்போது அவர் என்னுடைய மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் கல்லூரி மாற்றுச் சான்றிதழ்களை கொடுத்தால் போதும் என்று சொன்னதன் பெயரில் நான் அவரிடம் மேற்படி அ.சா.ஆ.50 ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சான்றிதழ்களை ஸ்ரீதர் ராஜீடம் கொடுத்துவிட்டு சான்றிதழ்கள் தொலைந்து விட்டதாக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றும் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னார்

சரியல்ல. 23.09.2013 ஆம் தேதி பாலக்கோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி வாக்குமூலம் கொடுத்து உள்ளேன் என்றும், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.01.29 18:31:18 +0530

Chief Judicial Magistrate,
Erode.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.வெங்கடாசலம் **PW–61** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(எதிரி ஆஜர்கள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை:–**

நான் தர்மபுரி மாவட்டம் கடத்தூரில் குடியிருக்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ., பி.எட்., படித்துள்ளேன். நான் எந்த வருடம் என்ன வேலையில் சேர்ந்தேன் என்றால் 1981 ஆம் ஆண்டு தமிழ் ஆசிரியராக தர்மபுரி மாவட்டம் கோட்டப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் பணியில் சேர்ந்தேன். நான் எந்த வருடம் என்ன பணியில் ஓய்வு பெற்றேன் என்றால் 2012 ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக ஓய்வு பெற்றேன். சின்னப்பன் மகன் ஏழுமலை என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ஆமாம் தெரியும், அவர் வேப்பிலைபட்டியை

சேர்ந்தவர். நான் ஆசிரியர் நேர்முக இன்டர்வியூவை தவிர tnpsc தேர்வுகள் ஏதும் எழுதி உள்ளேனா என்றால் இல்லை.

என்னுடைய அலைபேசி எண் என்னவென்றால் 9442165473. இது எந்த நிறுவனத்தின் அலைபேசி எண் என்றால் பிஎஸ்என்எல் அலைபேசி எண். மேலே சொன்ன அலைபேசி எண்ணை தற்போதும் பயன்படுத்தி வருகிறேனா என்றால் ஆமாம். எந்த ஆண்டு முதல் இந்த எண்ணை பயன்படுத்தி வருகிறேன் என்றால் மொபைல் அறிமுகமான காலகட்டத்தில் இருந்து அதை பயன்படுத்தி வருகிறேன். நான் ஏதேனும் சங்கத்தில் பொறுப்பில் உள்ளேன் என்றால் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடங்கள் நான் சமூக முன்னேற்ற சங்கத்தில் ஒன்றிய செயலாளராக பொறுப்பில் இருந்தேன். அந்த சங்கத்தின் நோக்கம் என்னவென்றால் ஏழை எளிய மாணவர்களுக்கு, அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்கு புத்தகங்கள் பரிசாக கொடுத்து ஊக்குவிப்பது வழக்கமாகக் கொண்டிருந்தோம்.

இந்த வழக்கு சம்பந்தமாக என்னை கோவை சிபிசிஐடி டிஎஸ்பி விசாரித்தார்கள் என்றால் ஆமாம், இந்த வழக்கு எதற்கான வழக்கு என்று தெரியுமா என்றால் 2012 ஆம் ஆண்டு டிஎன்பிஎஸ்சி தேர்வு வினாத்தாள் தேர்வுக்கு முன்பு வெளியானது தொடர்பான வழக்காகும். என்னை எதற்காக அழைத்து விசாரித்தார்கள் என்றால் எனக்கு மேற்படி

சம்பவத்தில் ஏதும் தொடர்பு உள்ளதா என்பதை அழைத்து விசாரித்தார்கள், நான் எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.01.29 18:31:27 +0530

Chief Judicial Magistrate,
Erode.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.ஏழுமலை **PW–62** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(எதிரி ஆஜர்கள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் 2014 ஆம் ஆண்டு எங்கு குடியிருந்தேன் என்றால் தர்மபுரியில் குடியிருந்தேன். என்னுடைய சொந்த ஊர் எதுவென்றால் வேப்பிலைபட்டி. தற்போது சாட்சியமளித்துச் சென்ற அ.சா.61 வெங்கடாசலம் அவரை தெரியுமா என்றால் தெரியும். அவரை எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் கடத்தூரில் 11ஆம் வகுப்பு படித்தபோது அவர் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ., பி.எட்., படித்துள்ளேன், அவ்வாறு படித்த பின்பு நான் எந்த வேலையில் எப்போது சேர்ந்தேன் என்றால் 2005 ஆம் ஆண்டு தர்மபுரி

மாவட்டம் ஒகேனக்கல் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். நான் ஏதேனும் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக கோவை சிபிசிஐடி துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தாரா என்றால் ஆமாம். எதற்காக என்னை விசாரித்தார்கள் என்றால் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 2 தேர்வுக்கான வினாத்தாள்கள் தேர்வுக்கு முன்பு வெளியிட்டது சம்பந்தமான வழக்கில் என் மீது மொட்டை பெட்டிஷன் வந்திருப்பதாக சொல்லி விசாரித்தார்கள். என்னை அவர்கள் விசாரித்த போது அந்த சம்பவத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னேன். என்னுடைய அலைபேசி எண் என்னவென்றால் 9751506676 ஆகும். மேற்படி அலைபேசி எண்ணின் சர்விஷ் ப்ரொவைடர் யார் என்றால் முன்னர் ஓடபோன் தற்போது ஏர்டெல். மேற்படி அலைபேசியை எந்த ஆண்டு முதல் பயன்படுத்தி வருகிறேன் என்றால் நான் மொபைல் போன் வாங்கியது முதல் தற்போது வரையில் அதை பயன்படுத்தி வருகிறேன் தற்போது நான் எங்கே வேலை செய்கிறேன் என்றால் தர்மபுரி மாவட்டம் மொடக்கேறி ஊராட்சி ஒன்றியதொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிகிறேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA Digitally signed by K KRISHNA PRIYA Date: 2026.01.29 18:31:39 +0530

Chief Judicial Magistrate,
Erode.